# IN THE COURT OF THE PRINCIPALDISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 221/2015

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 05.11.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேந்திரன் | Father's Name | : சுப்புராயன் |
| Village | : கூடமலை | Taluk | : கெங்கவல்லி |
| Calling | : விவசாயம் | Age | : 62 |

துவக்க நேரம்: 12.31 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை :

நான் இவ்வழக்கில் 1-ம் பிரதிவாதி ஆவேன். என் தரப்பில் நான் எழுத்துமூல சாட்சியத்தை தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். நான் சொல்லி இந்த சாட்சியம் தயார் செய்யப்பட்டது. இதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| **வ.எண்.** | **ஆவணம்** | **தன்மை** |
|---|---|---|
| 1. | கடந்த 07.02.1943 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் | **பி.த.சா.ஆ.2** |
| 2. | கடந்த 11.11.1987 தேதியிட்ட கிரையப்பத்திர சான்றிட்ட நகல் | **பி.த.சா.ஆ.3** |

| | | |
|---|---|---|
| 3. | ச.எண்.636/18-க்கான மாதிரி வரைப்படம் | **பி.த.சா.ஆ.4** |

( பி.த.சா.ஆ.2, 3 ஆகியவை சாட்சியின் பெயரில் இல்லை என்றால் என்பதாலும் வேறு நபர்களின் பெயரில் உள்ளதாலும் இந்த இரு ஆவணங்களும் இந்த சாட்சியின் மூலமாக குறியீடு செய்ய வாதி தரப்பில் கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டது. ஆட்சேபனையுடம் இவ்விரு ஆவணங்கள் குறியீடு செய்யப்படும்)

மேற்கண்ட என்னுடைய சாட்சியத்தையும், ஆவணங்களையும் ஏற்று வழக்கை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) தம்மம்பட்டி - கெங்கவல்லி சாலையில் கூடமலை கிராமத்தில் தார் சாலையை ஒட்டி வடக்கில் உள்ளது என்றால் சரிதான். வாதியின் வீடு தாவா 1-வது அயிட்ட சொத்து உள்ள இடத்திற்கு வடபுறத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் குடியிருக்கு வீட்டின் மேற்குபுறத்தில் எனது வீட்டை ஒட்டி என்ன உள்ளது என்றால் 1 மீட்டர் அகலம் உள்ள சந்து உள்ளது.

2) எனது வீட்டிற்கு வடபுறத்தில் யார் வீடு உள்ளது என்றால் நெடுமாறன் வீடு உள்ளது. நெடுமாறன் என்பவர் என் வீட்டிற்கு மேற்குபுறத்தில் உள்ள 1 மீட்டர் அகலம் உள்ள சந்தின் வழியாகதான் அவர் வீட்டிற்கு சென்று வருகிறார் என்றால் ஆமாம்.

3) எனது வீட்டின் பின்புறம் உள்ள மேற்சொன்ன 2-வது அயிட்ட சொத்தில் உள்ள சந்தின் வடபுறத்தின் மேற்கு பகுதியில் கோபால் வீட்டிற்கு கிழக்கு பக்கமாக 1 மீட்டர் அகலத்தில் கோபால் என்பவர் கல்சுவர் கட்டியுள்ளார் என்றால் கல்சுவர் உள்ளது சரிதான், அதனை பெரியசாமிதான் (வாதி) கட்டினார்.

பிரதிவாதி தரப்பு ஆவணங்களை பரிசீலிக்க வேண்டி, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்க வேண்டப்பட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு, குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 12.59 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal Distrit Munsif, Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.221/2015, Dt.05.11.2024.